EN/03/Aug- Sep/2024

# BELIEVERS EASTERN CHURCH WORLD HEADQUARTERS

Office of the Metropolitan, St. Thomas Community, Kuttapuzha P. O., Thiruvalla - 689103 Kerala, India

## மேய்ப்பரின் மடல்

ஆகஸ்ட்/செப்டம்பர் 2024

சகல பேராயர்மார்கள் மற்றும் ஆயர்மார்கள், அருட்தந்தையர்கள், திருத்தொண்டர்கள், நற்செய்தியாளர்கள், திருச்சிலுவை சகோதரிகள் மற்றும் பிலிவர்ஸ் ஈஸ்டன் சர்ச்சின் உலகம் முழுவதும் இருக்கின்ற அனைத்து விசுவாசிகளுக்கும், பிதா, குமாரன், தூய ஆவியானவரின் நாமத்தினால் ஆசி மற்றும் வாழ்த்துக்கள். – ஆமென்! ✝

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

பிலிவர்ஸ் ஈஸ்டன் சர்ச்சின் மெட்ரோபொலிட்டன் அடிகளாராக நியமிக்கப்பட்டதன் பின்னர், நான் எழுதுகின்ற முதல் மேய்ப்பரின் மடல் இதுவாகும். நீங்கள் அனைவரும் எனக்கு காண்பிக்கின்ற அன்பு மற்றும் பிரார்த்தனைக்காக எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்தபடி, இந்த மடலை எழுத ஆரம்பிக்கின்றேன். முதலாவதாக நான் என் விண்ணக இறைதந்தைக்கு நன்றி செலுத்துகின்றேன். ஏனெனில், அவர் நமக்கு மிகவும் உண்மையுள்ளவராக இருக்கின்றார். மேலும், சமீப காலமாக நம்மோடு கூடவே இருந்து நம்மை வழிநடத்தி வருகின்றார்.

இந்த மடலின் மூலமாக, மிகவும் முக்கியமான சில விடயங்களை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

**முதலாவதாக:** 2024ம் வருடம் அக்டோபர் மாதம் நடைப்பெறவிருக்கும் **வாலிப மாநாடு,**

வாலிபர்களே, நமது திருச்சபையின் எதிர்காலமாகும். நமது பங்குத்திருச்சபைகளில் உள்ள வாலிபர்கள் ஆன்மீக ரீதியில் வலுவாகவும், சுறுசுறுப்பாகவும், செயல்படுவார்களானால், நமது திருச்சபையின் எதிர்காலம் பாதுகாக்கப்படும். இந்த நோக்கத்தை நமது மனதில் கொண்டு, 2024ம் வருடம் அக்டோபர் மாதம் வாலிப மாநாடு நடாத்த திட்டமிட்டு, அது தொடர்பாக பிரார்த்தனை செய்து ஆயத்தப்படுகின்றோம். பல்வேறு மறைமாவட்டங்களிலிருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட வாலிபர்கள் அங்கு ஒன்றுகூட இருக்கின்றார்கள். தயவு செய்து இந்த வாலிப மாநாட்டிற்காக மிகவும் ஆர்வத்தோடு மன்றாடும்படியாக கேட்டுக்கொள்கின்றேன்.

உங்கள் குடும்ப பிரார்த்தனையின் போதும் இது தொடர்பாக மன்றாடவும்: வாலிப மாநாடு நிறைவு பெறும்வரை உங்கள் பங்குத்திருச்சபைகளில் பிரார்த்தனை கூட்டங்களை ஏற்பாடு செய்யுங்கள். இந்த கூட்டத்திற்கு பங்குக்கொள்கின்ற வாலிப சகோதர சகோதரிகளின் பாதுகாப்பான பிரயாணத்திற்காகவும் அனைத்து ஏற்பாடுகளுக்காகவும், இந்த மாநாட்டின் மூலம் எல்லா வாலிபர்களும் தங்களை தூய வாழ்க்கைக்கு அர்ப்பணிக்கும்படியாக மன்றாடுங்கள்.

**இரண்டாவதாக** : தூய திருச்சபைக்கு சேவை செய்யும்படியாக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்க, நம்முடைய திருச்சபைகளிலிருந்து அர்ப்பணிப்புள்ள இளம் சகோதர சகோதரிகளை பயிற்றுவிப்பதற்கான மிகப் பெரிய தேவை உள்ளது. இயேசு கிறிஸ்து கூறியது போலவே, ஆன்மீக தேவையுள்ள மக்கள் அநேகர் இருப்பினும், அந்த தேவைகளை பூர்த்தி செய்ய சிலரே இருக்கின்றார்கள். அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டும்? அந்த விடயத்தை நிறைவேற்றக்கூடிய அநேகரை இறைபணிக்காக அனுப்பும்படியாக ஆண்டவரிடத்தில் மன்றாடுவதாகும். (புனித மத்தேயு 9:36-38) இந்த விண்ணப்பங்கள் நமது அனைத்து மன்றாட்டு வேளைகளிலும் திருச்சபையிலும், வீடுகளிலும் தொடர்ந்தும் செய்யக்கூடிய மன்றாடாக அமைய வேண்டும். நீங்கள் ஒரு பெற்றோராக உங்கள் பிள்ளைகள் இறைவனுக்கு பணி செய்ய தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிப்பதை தேர்ந்தெடுக்கும்படியாக அவர்களுக்காக மன்றாடுங்கள். நாம் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். அப்பொழுது மற்றவர்கள் நம்மை பின்பற்றுவார்கள்.

**மூன்றாவதாக** : நமது பிரதான செமினரி, மறைமாவட்ட செமினரி மற்றும் திருச்சிலுவை சகோதரிகளின் பயிற்சி நிலையங்களில் புதிய கல்வி திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில் பயிற்சி பெறுகின்ற சகோதர சகோதரிகள் கற்றுக்கொண்டு, பயிற்சி பெற்று இறைபணிக்காக தங்களை அர்ப்பணிக்கும்படியாக மன்றாடுங்கள்.

**நான்காவதாக** : நமது தூய திருச்சபையின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்துக்கொள்ள நம்பிக்கையுடன் கொடுப்போமாக. கடுமையான வறுமையின் போதும், தங்களுடைய திராணிக்கு மேலாக கொடுத்த மாசிதோனியத் திருச்சபை குறித்து புனித பவுல் அடிகளார் நமக்கு நினைவூட்டுகின்றார். (2 கொரிந்தியர் 8:1-5) நமது தூய திருச்சபையும் உண்மையாகவே கொடுத்தல் தொடர்பாக, மிகவும் பிரசித்தமான ‘‘தன்னிடமிருந்த அனைத்தையும் கொடுத்த’’ ஏழை விதவைப் பெண்ணைப் போலவே - தாராள மனதோடு நம்பிக்கையோடு கொடுக்கும்படியாக மன்றாடுங்கள். (புனித மாற்கு 12:41-44). மனமகிழ்வோடு கொடுப்பவரை ஆண்டவர் நேசிக்கின்றார் என்பதையும் (2கொரிந்தியர் 9:6-7) நாம் மனமகிழ்ச்சியோடு கொடுக்கும் போது, அவர் வானத்தின் பலகணிகளைத் திறந்து அவருடைய ஆசீர்வாதத்தை வழங்குவார் என்பதையும் (மலாக்கி 3:10-11) நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

அன்பான பிள்ளைகளே, நான் இந்த மடலை எழுதி நிறைவு செய்வதற்கு முன்னர், நமது நாட்டின், பிரதேசத்தின் மற்றும் மாவட்டத்தின் தலைவர்களுக்காக மன்றாடுவது, திருச்சபையாக நம் அனைவருடையதும் பொருப்பாகும் என்பதை உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகின்றேன். (1திமொத்தேயு 2:1-4) நாம் அனைவரும் நம்பிக்கையோடு அதை நிறைவேற்றுவோம். வன்முறைகள் மற்றும் உறுதியற்ற தன்மையினால் பாடுகள் அனுபவிக்கின்ற பங்களாதேஷ் நாட்டிற்கு, விரைவில் சமாதானமும் உறுதி நிலையும் மீண்டும் கிடைக்கும்படியாக மன்றாடுவோம். மேலும், இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ள மக்களுக்கு இறைவனுடைய தயவும் இரக்கமும் கிடைக்கும்படியாக அவர்களுக்காக மன்றாடும்படியாக தயவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அன்பான சகோதர சகோதரிகளே, இறுதியாக, நமது நித்திய நினைவாகிய மோரன் மோர் அத்தனேசியஸ் முதலாவது யோஹான் மெட்ரோபொலிட்டன் அடிகளார் கூறியது போலவே, **திருத்தூதர் பணிகள் என்னும் புத்தகம் நமது வரைப்படமாகும்;** அது நமக்கு ஒரு திசைகாட்டியாகும், அது நமது ஓர்த்தோடொக்ஸ் நம்பிக்கையின் அடிப்படை வழிகாட்டியாகும். அப்புத்தகத்தை அடிக்கடி வாசியுங்கள். நாம் அந்த கொள்கைகளை தனித்தனியாகவும் குழுவாகவும் பங்குத்திருச்சபையாகவும் மற்றும் தூய திருச்சபையாகவும் ஒன்றாக சேர்ந்து வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவோமாக.

நமது முன்னோக்கிய பயணத்தின் போது, நாம் இயேசு கிறிஸ்துவின் மேல் எமது கண்களை பதிய வைப்போமாக. தூய திருச்சபையின் இறைவன் தாமே, அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ தேவையான பெலத்தையும் ஊக்கத்தையும் தினந்தோறும் நமக்கு தந்தருளுவாராக. அன்பு செலுத்தவும் இறைபணியை நிறைவேற்றவும் தூய ஆவியானவருடைய வழிநடத்தல் எந்நேரமும் நமக்கு கிடைப்பதாக. மேலும், நமது அனைத்து முயற்சிகளும் பலனளித்து, அந்த பலன்கள் நித்தமும் நிலைத்திருக்கவும், அதன் மூலம் பிதா, குமாரன் தூய ஆவியாகிய தூய திரியேகத்துவ இறைவனுக்கு மகிமையும் கனமும் ஆராதனையும் இப்பொழுதும் எப்பொழுதும் நித்தமும் கிடைப்பதாக. ✝

கிறிஸ்துவுக்குள் உங்கள் தகப்பன்,

**திகதி:** 12-08-2024
**இடம்:** உலகளாவிய தலைமையகம்

மோரன் மோர் சாமுவேல் தியோபிலஸ்
மெட்ரோபொலிட்டன் அடிகளார்.

---

**கவனத்தில் கொள்க:** தயவு செய்து இதை உங்கள் பிராந்திய மொழியில் மொழிப்பெயர்த்து, விசுவாசிகளை தைரியப்படுத்தும்படியாக அனைத்து பங்குத்திருச்சபைகளிலும் வாசிக்கும்படியாக செயல்படுங்கள்.